**(சார்பு நீதிமன்றம்), பரமத்தி**

**ஓ.எஸ்.எண்.87/2022** **நாள். 06.04.2026**

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06-ம் நாள் பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**பி.சா.2 மோகன் த/பெ. கருப்பண்ணன்.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வாதி வளர்மதி என்பவர் என்னுடைய உடன் பிறந்த சகோதரி ஆவார். இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி கருப்பண்ணன் என்பவர் எனக்கும், வாதிக்கும் தகப்பனார் ஆவார். எங்களது குடும்பமானது விவசாய குடும்பம் என்றால் சரிதான். எங்களது பூர்வீக குடும்ப சொத்தை பொறுத்து 1986-ம் ஆண்டு பாகப்பிரிவினை நடந்தது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது தந்தைக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவர்தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் படி எனது அப்பாவிற்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் தண்ணீர் பாயக்கூடிய தோட்டநிலங்கள் என்றால் 6 ஏக்கர் கிணறு ஒரு பக்கமாகவும், மீதி நிலங்கள் தனித்தனியாகவும் உள்ளது. 6 ஏக்கர் கிணறு பாகத்தில் எனது தந்தை என்ன பயிர் வைத்துக்கொண்டு இருந்தார் என்றால் சோளம், கடலை ஆகியவை பயிர் செய்தார். அப்போது நான் குழந்தையாக இருந்ததால், வேறு என்ன பயிர் செய்தார் என்று எனக்கு தெரியவில்லை.

2) மேற்படி 6 ஏக்கர் நிலத்தில் தென்னை மரமும், சோளமும் தற்போது உள்ளது. 6 ஏக்கரில் தென்னை மரம் எத்தனை உள்ளது என்றால் சுமாராக 200 மரம் உள்ளது. எனது தந்தைக்கு பூர்வீக சொத்தில் இருந்து வந்த வருமானத்தின் மூலம் 1987-ம் ஆண்டு ஒரு கிரையம் பெற்றார் என்றால் சரிதான். நான்

20.05.1985–ம் தேதியில் பிறந்தேன். எனது சகோதரி வளர்மதி 1988ம் ஆண்டில் பிறந்தார். வா.சா.ஆ–4 பாகப்பிரிவினை பத்திரம் 1990–ம் ஆண்டு பதிவு செய்யப்படும்போது நான் மைனர் குழந்தையாகவும், எனது தங்கை குழந்தையாகவும் இருந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் எனது சகோதரியின் பெயரை குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் வாதிக்காக யாரும் கையெழுத்திடவில்லை என்றால் சரிதான்.

3) வா.சா.ஆ.4 பாகப்பிரிவினை பத்திரத்தில், வாதி தரப்பினர் இல்லை என்றாலும், வாதி தரப்பில், கார்டியன் என்ற முறையில் யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றாலும், வா.சா.ஆ.4 பத்திரத்தில் உள்ள வாசங்கள் எனது சகோதரி வளர்மதியை கட்டுப்படுத்தாது என்றாலும் சரிதான். எனது தந்தை, எனது திருமணத்திற்கு பிறகு வழக்கு சொத்தில், தனியாக சமைத்து சாப்பிட்டுக்கொண்டு உள்ளார். வாதி திருமணத்திற்கு பிறது அவரின் கணவருடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அவ்வப்போது வாதி என் அப்பாவை வந்து பார்த்து செல்வார். வழக்கு சொத்தை பொறுத்து, வாதி வளர்மதிக்காக, தகப்பனார் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல, நான்தான் அனுபவத்தில் உள்ளேன். வழக்கு சொத்தில் நான் ஒரு பகுதியிலும், என் தகப்பனார் மற்றொரு பகுதியிலும் இருந்து தனியாக சமைத்து சாப்பிட்டு வருகிறோம்.

4) வழக்கு சொத்தில் உள்ள தோட்டத்தில்தான் வீடு உள்ளது என்றால் சரிதான். எனக்கும், எனது தகப்பனாருக்கும், எனது சகோதரிக்கும் இடையே தற்போது வரை சார்பதிவாளர் அலுவலத்தில் பாகப்பிரிவினை பத்திரம் எதுவும் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் 1990–க்கு பிறகு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படவில்லை. எனது தங்கை எனக்கும், எனது தந்தைக்கும் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை பொறுத்து,

1990-ம் ஆண்டு ஏற்பட்ட வா.சா.ஆ-4 பாகப்பிரிவினை பத்திரம், பெண் குழந்தை பாகத்திற்கு வரக்கூடாது என்பதற்காக ஒப்புக்கு எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை பொறுத்து, உபய வாதிகளின் கூட்டு அனுபவத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல. வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2026.04.06 17:50:58 +0530

Sub Judge,
Paramathy